

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.2.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டில் மகளிர் நலனை மேம்படுத்திடும் வகையில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையால் தயாரிக்கப்பட்ட "தமிழ்நாடு மாநில மகளிர் கொள்கை 2024" –ஐ வெளியிட்டார்கள். இந்நிகழ்ச்சியில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி. கீதா ஜீவன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை செயலாளர் திருமதி ஜெயஸ்ரீ முரளீதரன், சமூக நலத்துறை ஆணையர் திருமதி வே.அமுதவல்லி, ஆகியோர் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.2.2024) தலைமைச் செயலகத்தில், பொதுத்துறை சார்பில் சென்னை, சிந்தாதிரிப்பேட்டையில் 17 கோடி ரூபாய் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள 59 அறைகள் கொண்ட அரசு ஓய்வு இல்லத்தை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பொதுத்துறை செயலாளர் கே.நந்தகுமார், மற்றும் பொதுத்துறை துணைச் செயலாளர் (மரபு) திருமதி ஜெ.இ. பத்மஜா, ஆகியோர் கலந்து கொண்டனர்.

### தேர்வாய்க் கண்டிகையிலிருந்து ஒரு புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம்!

# மீஞ்சூர் பகுதியில் நல்ல குடிநீர் வழங்கும் திட்டம் விரைவில் நிறைவேறும்!

## சட்டப்பேரவையில் அமைச்சர் கே.என்.நேரு அறிவிப்பு!

**சென்னை, பிப்.23-**

**சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது நடைபெற்ற விவாதம் வருமாறு:-**

**துரை சந்திரசேகரன்:** பொன்னேரி தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியம், சீமாவரம் ஊராட்சிக்கு கூட்டுக் குடிநீர் திட்டத்தை செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**கே.என்.நேரு:** திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதிக்குட்பட்ட சோழவரம் ஊராட்சி ஒன்றியம், சீமாவரம் ஊராட்சியில் சீமாவரம், சின்ன சீமாவரம் மற்றும் சீமாவரம் காலனி ஆகிய 3 குடியிருப்புகள் உள்ளன. இக்குடியிருப்புகளுக்கு, தனி மின்விசை திட்டங்கள் மூலம், தற்போது ஊரக வளர்ச்சித் துறைமூலம் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, சீமாவரம் ஊராட்சிக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் புதிய கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்தும் கருத்துரு இப்போது புதிதாக வந்திருக்கிறது. விரைவில் அதை நிறைவேற்றுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**துரை. சந்திரசேகர்:** மீஞ்சூர் சுற்றுவட்டார கிராமங்களான அத்திப்பட்டு, வள்ளூர், தந்தியம்பாக்கம், மேலூர் போன்ற கிராமங்களில் குடிநீர் பிரச்சினை மிக அதிமாகக் காணப்படுகிறது. இதற்கெல்லாம் தங்களிடம் ஒரு விரிவான திட்டம் இருந்தால், மக்களின் நீண்ட நாள் கோரிக்கை நிறைவேற்றப்படுமா?



**அமைச்சர் கே.என். நேரு:** உறுப்பினர் கேட்டது தொடர்பாக ஏற்கெனவே, ஒன்றியத்தின் பெருந்தலைவர் மற்றும் அந்தப் பகுதியில் இருக்கிறவர்கள் எல்லாம் வந்திருந்தார்கள். மீஞ்சூர் பகுதி முழுவதும் குடிநீர் உப்பாக இருக்கிறது. எவ்வளவு தண்ணீர் கொடுத்தாலும் உப்பாக இருக்கிறது. எனவே, புதிய கூட்டுக் குடிநீர் திட்டம் ஒன்று துவங்கப்பட வேண்டும் என்று கேட்டார்கள். நான் அதிகாரிகளிடம் கலந்துபேசியபோது, மீஞ்சூரில்தான் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் முதன்முதலில் தலைவர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட திட்டம் அங்கிருக்கிறது; அந்தத் திட்டத்தில், 100 MLDக்கு அங்கு இருக்கிற ஒப்பந்தக்காரர் சரியாக இல்லாததால், இப்போது 40, 50 MLD தான் அதிலிருந்து தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது. நாங்கள் அதிகாரிகளிடம் சொல்கிறபோது, புதிய கூட்டுக் குடிநீர் திட்டம் துவங்குவதைக் காட்டிலும், அந்தப் பகுதிக்குத் தேவையான மொத்த குடிநீர் எவ்வளவு என்று கேட்டபோது, 8.5 MLD இருந்தால் போதும் என்று சொன்னார்கள். அங்குள்ள கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்திலிருந்து, pipe line மூலம் இணைப்பு கொடுத்து மீஞ்சூருக்கு முழுவதுமாக தண்ணீர் கொடுக்கவேண்டுமென்று அதிகாரிகளிடம் சொன்னோம். அதிகாரிகளும் ஆய்வு செய்து எடுத்தவுடன் 8 MLD கொடுக்க இயலாது, முதலில் ஒரு 4 MLD கொடுக்கலாம் என்று எங்கள் துறையினுடைய Metro MD அவர்களும், நம்முடைய அமைச்சர் இ. பெரியசாமி அவர்களுடைய துறையின் செயலாளர் அவர்களும், அதேபோல அங்கே இருக்கிற MD மற்றும் குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் மூன்று பேரும் பேசி 4 MLD கொடுக்கலாம், விரைவில் ஏற்பாடு செய்யலாம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

அடுத்ததாக, தேர்வாய்க்கண்டிகையிலிருந்து ஒரு புதிய கூட்டுக் குடிநீர் திட்டம் அந்தப் பகுதிக்குக் கொண்டு வருவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு இருக்கிறது. எனவே, இந்த ஆண்டு சட்டமன்றத்திலேயே அறிவிக்கின்றபோது, மீஞ்சூர் பகுதிக்கு நல்ல குடிநீர் வழங்குவதற்கு அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**துரை. சந்திரசேகர்:** அமைச்சர் அவர்களின் விரிவான பதிலுக்கு மிக்க நன்றி. ஏனென்றால்; முன்னாள் முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்டு, இப்போதைய முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட இந்தத் திட்டம், முழுமையாக மக்களுக்குச் சென்றடைய வேண்டுமென்றால், இந்த ஆட்சியைவிட்டால் வேறு யாரும் செய்து கொடுக்க மாட்டார்கள். ஆகவே, நிரந்தரமாக இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். மக்களுக்கு நல்லது செய்ய வேண்டுமென்று தொகுதி மக்களின் சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் கே.என். நேரு:** திருவள்ளூர் மாவட்ட பொறுப்பு அமைச்சராக உள்ள ஆர். காந்தி அவர்கள்தான் என்னிடம் மீஞ்சூர் பகுதிக்கு கடல்நீரை குடிநீராக்கி வழங்க வேண்டுமென்று முதலில் கோரிக்கை வைத்தவர். மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியம், சோழவரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சீமாவரம் ஊரக குடியிருப்புகளுக்கு உடனடியாக காட்டுப்பள்ளி கடல்நீரை குடிநீராக்கும் ஆலையிலிருந்து 4 MLD குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. விரைவிலே அந்தப் பகுதிக்கு நல்ல தண்ணீர் வரும். உங்கள் நன்றியை அமைச்சர் காந்தி அவர்களுக்குச் சொல்லுங்கள்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### விழுப்புரம் மாவட்டம் - மேல்சேவூர் அருகே விபத்தில்

# உயிரிழந்த சிறுவனின் குடும்பத்திற்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

விழுப்புரம், பிப். 23-

விழுப்புரம் மாவட்டம், மேல்சேவூர் அருகே அரசு பேருந்து கவிழ்ந்த விபத்தில் உயிரிழந்த சிறுவனின் குடும்பத்திற்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிவிப்பு வருமாறு:-

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், மேல்சேவூர்(ம) அம்மன் குளத்துமேடு கிராமத்தில் நேற்று (21.2.2024) மாலை TN32N3938 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்து சாலை வளைவைக் கடக்க முயன்றபோது எதிர்பாராதவிதமாக கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் பேருந்தில் பயணம் செய்த அம்மன் குளத்துமேடு கிராமத்தைச் சேர்ந்த செல்வன் பிரவீன் குமார் (வயது 16) த/பெ. அன்பழகன் என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியை அறிந்து மிகவும் வேதனையடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் பலத்த காயமடைந்து விழுப்புரம் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் செல்வன் வீனேஷ் (வயது 16) த/பெ. ஜெயராஜ் என்பவருக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கவும் அறிவுறுத்தியுள்ளேன்.

இவ்விபத்தில் உயிரிழந்த சிறுவனின் குடும்பத்திற்கும் அவருடைய உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்வதோடு அவரது குடும்பத்திற்கு இரண்டு இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவருக்கு ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### 71 அ வட்டத்தில் இன்று மா.ருத்ரமூர்த்தி தலைமையில்

# 270 காலணித் தொழிலாளர்களுக்கு நல உதவிகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்குகிறார்!

சென்னை, பிப்.23-

சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க. நகர் வடக்கு பகுதி 71 அ வட்ட சார்பில் முதல்வர் அவர்கள் பிறந்தநாளை முன்னிட்டு இன்று (23.02.2024) மாலை 4 மணிக்கு சென்னை-12, மேட்டுபாளையம், அருந்ததியர் நகர் மைதானத்தில் 71 அ வட்டக் கழகச் செயலாளர் மா.ருத்ரமூர்த்தி தலைமையில் 270 காலணி தைக்கும் தொழிலாளர்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு மற்றும் சென்னை மாநகராட்சி மேயர் பிரியாராஜன், திரு.வி.க. நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ப.தாயகம் கவி, பகுதி கழக செயலாளர்கள் செ.தமிழ்வேந்தன், எம்.சாமிகண்ணு, மண்டல குழு தலைவர் சரிதா மகேஷ்குமார், தொகுதி பொறுபபாளர் டாக்டர் யாழினி, மாமன்ற உறுப்பினர்கள் புனிதவதி எத்திராசன், இசட்.ஆசாத் , மாவட்ட அமைப்பாளர்கள் பி.உதயசங்கர், டி. லோகேஷ், பி.ஜெ.துளசிங்கம், ந.துலுக்காணம், எம். பெரோஸ்கான், கா.ராஜ் முகமது, பெரம்பூர் ஆர். ராஜன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்வில் 270 காலணி தைக்கும் தொழிலாளர்களுக்கு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் திருமதி. கயல்விழி செல்வராஜ் நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

இதில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல் மாநில கழக நிர்வாகிகள் சங்கர நாராயணன், தமிழன் பிரசன்னா, பி.கே. மூர்த்தி, கே.சந்துரு, எஸ். மணிமுடி, பரிதி இளம்சுருதி எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக் அப்துல்லா, வே.உமாகாந்த் மாவட்ட கழக நிர்வாகிகள்கோ.ஏகப்பன், தேவஜவஹர், ஜி.எம். தேவன், புலவர் சாமி நாகப்பன், பகுதி கழக செயலாளர்கள், ஐ.சி.எப். வ.முரளிதரன், ஏ.நாக ராசன், கூ.பி.ஜெயின், வே. வாசு எஸ்.ராஜசேகர், எஸ். முரளி, டி.எஸ்.பி.ராஜகோபால், எம்.டி.ஆர். நாகராஜ், சொ.வேலு, வி.சுதாகர்

பொதுக்குழு உறுப்பினர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள், வட்டக் கழக நிர்வாகிகள் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

88வது வட்டக் கழகச் செயலாளர் சி.சீனிவாசன் நன்றி கூறுகிறார்.

### நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., தலைமை ! சு.கல்யாணசுந்தரம் எம்.பி. வரவேற்புரை!

# மயிலாடுதுறையில் 'உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்' பொதுக்கூட்டம்!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், இரா.தி.சபாபதிமோகன் சிறப்புரை! செ.இராமலிங்கம் எம்.பி., கொறடா கோவி.செழியன், குத்தாலம் பி.கல்யாணம், எம்.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ., பங்கேற்பு!

மயிலாடுதுறை, பிப். 23

மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை சுப்பிரமணியபுரம் கலைஞர் அரங்கில் மயிலாடுதுறை நாடாளுமன்ற தொகுதி நாடாளுமன்ற தேர்தல் 2024 உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல் பாசிசம் வீழட்டும்! இந்தியா வெல்லட்டும் ! மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

பொதுக்கூட்டத்திற்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம். முருகன் தலைமை தாங்கினார். தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி., வரவேற்றார்.

மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ. இராமலிங்கம், திருவிடைமருதூர் சட்ட மன்ற உறுப்பினரும், அரசு தலைமை கொறடா கோவி.செழியன், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர் செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், கழக கொள்கை பரப்பு செயலாளர் இரா. தி.சபாபதிமோகன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

கூட்டத்தில் கழக இளைஞர் அணி துணைச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற தொகுதி பொறுப்பாளர் என்.இளையராஜா, மாநில மாணவர் அணி துணைச் செயலாளரும், சீர்காழி சட்ட மன்ற தொகுதி பொறுப்பாளர் மன்னை த.சோழராஜன், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர்கள் கி.சத்தியசீலன், எம்.எம்.சித்திக், ஏ.சி. என்.விஜயபாலன், கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.அருள்செல்வம், மாநில அயலக அணி துணைச் செயலாளர் இராம.விஜயன், மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் ஆடுதுறை மு. உத்திராபதி, குடந்தை மாநகரச் செயலாளர், மாநகராட்சி துணை மேயர் சுப.தமிழழகன் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஜி.என்.ரவி, இராம. இளங்கோவன், முத்து மகேந்திரன், குட்டி தெட்சிணாமூர்த்தி மயிலாடுதுறை மாவட்டத்தை சேர்ந்த மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.ஜி. சீனிவாசன், துணைச் செயலாளர்கள் மு.ஞான வேலன், எஸ்.செல்வமணி, கண்ணகிபன்னீர், மாவட்டக் கழக பொருளாளர் மகா.அலெக்சாண்டர், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் என்.இளையபெருமாள், மூவலூர் எம்.மூர்த்தி, மங்கை எம்.சங்கர், செல்ல சேதுரவிக்குமார், மலர்விழி திருமாவளவன், ஏ.ஜி. ஜெ.பிரபாகரன், எம்.அப்துல்மாலிக், பி.எம்.அன்பழகன், ஞான.இமையநாதன், ப.முருகமணி, ஏ.ஆர். ராஜா, கு.வைத்தியநாதன், பஞ்சுகுமார், அமுர்த.விஜயகுமார் சீர்காழி நகரக் கழகச் செயலாளர் ம.சுப்ப ராயன், பேரூர் கழகச் செயலாளர்கள் எம்.சம்சுதீன், எம். அன்புச்செழியன், எஸ்கே. முத்துராஜா, என்.அண்ணாதுரை, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.கே.மருது, பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.சங்கரநாராயணன், அ.காந்தி, பி.சிவதாஸ், நத்தம் வின்சென்ட், எஸ்.வெற்றிவேல், ஜெ.கபிலன், ஹர்சத், எஸ்.சுவாமிநாதன், சுபாநெடுஞ்செழியன், பி.கென்னடி,

தஞ்சை வடக்கு மாவட்டக் கழகத்தை சேர்ந்த, மாவட்டக் கழக நிர்வாகிகள் நசிர்முஹமது, கோவி.அய்யாராசு, துரை முருகன், ஜெயலெட்சுமிநடராஜன், ஜெ.நடராஜன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் தி.கணேசன், எஸ்.கே.முத்துசெல்வம், தியாக. சுரேஷ்குமார், ஜெ.சுதாகர், கோ..தாமரைச்செல்வன், என்.நாசர், பி.எஸ்.குமார், சி.அம்பிகாபதி, கோ.க. அண்ணாதுரை, உதயச்சந்திரன், மிசா என்.மனோகரன், பகுதி செயலாளர்கள் செல்வராஜ், கல்யாணசுந்தரம், கிருஷ்ணமூர்த்தி, மு.கண்ணன், பேரூர் செயலாளர்கள் சப்பாணி, மகாலிங்கம், தாமரைச்செல்வன், கோ.சி.இளங்கோவன், எஸ்.கே.பஞ்சநாதன், ஜெ.ஜப்ரூதீன், எஸ்.பாலசுப்பரமணியன், மயில்வாகனன், டி.துளச்அய்யா, பி.கபிலன், வீ.சீனிவாசன், தியாக.ரமேஷ், எம்.ராஜா, பொதுக்குழு உறுப்பினர்கள் அசோக்குமார், மருது. நடாராஜன், எல்.ராஜேந்திரன், கலியமூர்த்தி, கருணாநிதி, ரேவதிநடராஜன், குடந்தை மாநகர உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். நகர்மன்ற தலைவர் குண்டாமணி (எ) என்.செல்வராஜ் நன்றி கூறினார்.

### பெரம்பலூர் மாவட்டத்திற்கு ரூ.366 கோடி மதிப்பீட்டில்

# கூட்டுக்குடிநீர்த் திட்டம் வழங்கிய தமிழ்நாடு அரசுக்கு நன்றி!

## மாவட்டச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன் தலைமையில் பொதுமக்கள் - நகராட்சி உறுப்பினர்கள் இனிப்புகள் வழங்கினர்!

பெரம்பலூர்,பிப்.23-

பெரம்பலூர் மாவட்டத்திற்கு ரூ.366 கோடி மதிப்பீட்டில் கூட்டுக்குடிநீர் திட்டம் வழங்கிய தமிழ்நாடு அரசுக்கும், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து, மாவட்டச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன் தலைமையில், பெரம்பலூர் மாவட்ட பொதுமக்கள் மற்றும் நகராட்சி உறுப்பினர்கள் பட்டாசு வெடித்து, இனிப்புகள் வழங்கி கொண்டாடினார்கள். பழைய பேருந்து நிலையத்தில் உள்ள காமராஜர் வளைவு, புதிய பேருந்து நிலையம் ஆகிய இடங்களில் நடைபெற்றஇந்த நிகழ்ச்சியில், மாநில ஆதிதிராவிடர் நலக் குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என். ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர் கி.முகுந்தன், ஒன்றிய செயலாளர்கள் எம்.ராஜ்குமார், வீ.ஜெகதீசன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் து.ஆதவன்(எ)ஹரி பாஸ்கர், மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர் பாரி (எ)அப்துல் பாரூக், தொ.மு.ச.மாவட்ட கவுண்சில் தலைவர் ஆர்.ரெங்கசாமி, மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் எம்.மணிவாசகம், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் அ.அப்துல்கரீம், உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் இலுப்பூர் பேரூர் கழக செயலாளர் வை.விஜயகுமார் இல்ல மணவிழாவில் வடக்கு மாவட்டக் கழக செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன், நடிகர்கள் சிவகார்த்திகேயன், சூரி ஆகியோர் மணமக்களை வாழ்த்தினார்கள்.